# மெட்ரிக்ஸ் கான்செப்ட் குழுமத்தின் மேஜிக்கல் கிறிஸ்துமஸ் விழாவில்

# சமூக நல இல்லங்களுக்கு நிதி உதவி

● நாகேந்திரன் வேலாயுதம்

சிரம்பான், டிச. 13-

கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தை முன்னிட்டு மெட்ரிக்ஸ் கான்செப்ட் குழுமம் ஒவ்வோர் ஆண்டும் மேஜிக்கல் கிறிஸ்துமஸ் விழா மிக கோலகலமாக நடைபெறுவதை போன்று இவ்வாண்டும் தொடங்கப்பட்டது.

ஆடல், பாடல், மாய வித்தைகள், கண் கவரும் அலங்காரங்கள் என பல்வேறு வகையிலான ஏற்பாடுகளுடன் நேற்று முன்தினம் இரவு இங்கு பண்டார் ஸ்ரீ செண்டாயான் டி'தெம்பாட் கண்ட்ரி கிளப்பில் அக்குழுமத்தின் விற்பனைப் பிரிவின் தலைமை அதிகாரி லிம் கொக் யி அதிகாரப்பூர்வமாக திறந்து வைத்தார். இவ்விழாவின்போது சிரம்பான் வட்டாரத்தைச் சேர்ந்த ஷெகினா பராமரிப்பு இல்லம், சிரம்பான் சிறுவர்கள் சமூக நலன் இயக்கம், விசிடேசியன் தேவாலயம் ஆகிய பராமரிப்பின் கீழ் இயங்கும் ஆதரவற்றோர் இல்லங்களுக்கு தலா 3 ஆயிரம் ரிங்கிட் என



மொத்தம் 9 ஆயிரம் ரிங்கிட் உதவித் தொகையையும் அவர் நேரடியாக வழங்கினார்.

இதே நிகழ்ச்சியில் குறிப்பிட்ட ஆதரவற்றோர் இல்லங்களைச் சேர்ந்த சுமார் 70 சிறுவர்களுக்கு கிறிஸ்துமஸ் விருந்து உபசரிப்புகளுடன், பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன.

